## இரண்டாவது தேர்ச்சி :
## முதிர்ச்சியடைந்த கிறிஸ்தவர்களாக வாழ்வர்

9

# 2.2. நாங்கள் ஒளியின் பிள்ளைகள்





**அருட்பணி தாவீதடிகள்**

அன்பின் வடிவம், ஆதரவின் இருப்பிடம், இரக்கத்தின் உறைவிடம், ஈதலின் ஊற்று, உழைப்பின் ஊக்கி, எளிமையின் திருவுருவம், ஒற்றுமையின் மூலைக்கல். ஊக்கத்தால் 33 மொழிகளை கற்றார். எழுத்தால் அவர் சீரிய இலங்கையை உருவாக்க முனைந்தார்.

**அருட்பணி அதிரியான் ஜோசப், அ.ம.தி.**

இசை மேதை, பாடலாசிரியர், எழுத்தாளர். தமிழ், சிங்கள மொழிகளில் திருவழிப்பாட்டுப் பாடல்களை இயற்றினார். இதய வீணை எனும் தலைப்பில் நத்தார் கீதங்கள் படைத்தார். திருப்பலியில் பாடப்படும் தியானப் பாடல்களுக்கு இசை வடிவம் அமைத்தார். தம் துறவற அர்ப்பணத்தால் மக்களை இறை உறவிற்கு மாதிரி காட்டினார்.

மேலே படத்தில் உள்ளவர்களைப் பற்றி நீங்கள் அறிந்திருக்கின்றீர்களா? உங்களைப்போல் சிறியவர்களாக இருந்த இவர்கள் தாம் வாழ்ந்த சமூகத்திற்கு பலவித நன்மைத் தனங்களை செய்துள்ளனர். இதனால் தாம் உலகில் உருவாகியதன் அர்த்தத்தை ஓரளவு நிறைவேற்றியுள்ளனர். நாமும் இறைவனால் விசேட விதமாக தெரிவு செய்யப்பட்ட மக்களாயிருக்கிறோம். எனவே எமக்கு உலகைக் கட்டி எழுப்புவதில் பல பொறுப்புக்கள் உள்ளன.

- நீங்கள் உறுதிப்பூசுதல் பெற இருக்கிறீர்கள்.
- தூய ஆவியைப் பற்றி அறிவது மிகவும் முக்கியம்.

**திருமுழுக்கில் நாம் பெறும் அருளை உறுதிப்பூசுதல் அருளடையாளம் ஆழப்படுத்தி வளர்க்கின்றது.**

- அப்பா, தந்தாய் என அழைக்கும் இறை பிள்ளைத் தன்மையில் ஊன்றச் செய்கிறது.
- கிறிஸ்துவுடன் மிக உறுதியாக ஒன்றிணைக்கின்றது.
- தூய ஆவியின் கொடைகளை வளர்க்கின்றது.
- திருச்சபையுடன் உள்ள ஒன்றிப்பை முழுமையடையச் செய்கின்றது.
- கிறிஸ்துவின் உண்மையான சாட்சிகளாக விசுவாசத்தை சொல்லாலும் செயலாலும் பாதுகாத்து வளர்க்கவும், கிறிஸ்துவின் பெயரைத் துணிவுடன் அறிக்கையிடவும், சிலுவையைப் பற்றி வெட்கமடையாதிருக்கவும் தேவையான விசேட வல்லமையை வழங்குகின்றது.

கத்தோலிக்க திருமறையின் மறைக்கல்வி # 1303

## செயற்பாடு :-

குழுவாகப் பிரிந்து பின்வரும் வினாக்களுக்கு விடை தருக. குழுக் கலந்துரையாடல் மூலம் விடயங்களை முன் வைக்குக.

- பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்ட நாம் கடவுளை “அப்பா, பிதாவே” எனக் கூப்பிடுகின்றோம். இதே போல் இறைத் தந்தையை வேறு எவ்விதமாக அழைக்கலாம்.
- உறுதிபூசுதல் அருளடையாளம் மூலம் திருச்சபையோடு எமக்குள்ள உறவு பூரணமடைகின்றது. அதன் உரிமையாளர் ஆவோம். இதற்கேற்ப உமது பங்கின் வளர்ச்சியில் நீர் எவ்வாறு செயலாற்றுவீர்?

- ♦ உமது சொல்லாலும், செயலாலும் எப்படி துணிவுடன் கிறிஸ்துவுக்கு சாட்சி பகர முடியும்?

  உமது வீட்டில், பாடசாலையில் செயற்படும் 2 சந்தர்ப்பங்களைத் தருக.
- ♦ நீர் தூய ஆவியினால் நிறைந்தவராய் துணிவுடன் பேசக்கூடிய சந்தர்ப்பங்கள் 2 தருக.

உதாரணம் :

உமது குடும்ப செபத்தின் போது வீட்டில் உள்ள ஒருவர் தொலைக்காட்சி பார்க்கும் சந்தர்ப்பத்தில் நீர் எவ்வாறு நடந்துகொள்வீர்?

## ஸ்தேவானின் துணிவு

ஸ்தேவான் அருளும் வல்லமையும் நிறைந்தவராய் மக்களிடையே பெரும் அருஞ்செயல்களையும் அரும் அடையாளங்களையும் செய்து வந்தார். அப்பொழுது உரிமையடைந்தோர் எனப்படுவோரின் தொழுகைக் கூடத்தைச் சேர்ந்த சிலரும் சிரேன் அலக்சாந்திரியா நகரினரும் சிலிசியா, ஆசியா மாநிலத்தவரும் ஸ்தேவானோடு வாதாடத் தொடங்கினர். ஆனால் அவரது ஞானத்தையும் தூய ஆவி வாயிலாக அவர் பேசிய வார்த்தைகளையும் எதிர்த்து நிற்க அவர்களால் இயலவில்லை.... தலைமைச் சங்கத்தில் அமர்ந்திருந்த அனைவரும் அவரை உற்றுப்பார்த்தபோது அவரது முகம் வானதூதரின் முகம்போல் இருக்கக் கண்டனர்.

தி.ப. 6:8-15

### செயற்பாடு :

1. மேலுள்ள திருவிவிலியப் பகுதியை அமைதியாக வாசியுங்கள்.
2. பின்வரும் பாத்திரங்களை ஏற்று நடிக்க முன்வாருங்கள்.
   - I. தூய ஆவியால் நிரம்பிய ஸ்தேவான்.
   - II. அவரது அருஞ்செயல்களால் குணமடைந்த மக்கள் குழு.
   - III. அவரது ஞானத்தைப் புறக்கணித்த கூட்டம்.
   - IV. தலைமைச் சங்கத்தின் முன்னிலையில் பொய்ச்சாட்சி கூறியவர்கள்.
3. தி. ப. 6:8-15 பகுதியை நடித்துக்காட்டுங்கள்.
4. இந்நாடகத்தின் செய்தியை பயிற்சிப் புத்தகத்தில் எழுதுங்கள்.

சமூகத்தில் பல்வேறுபட்ட பணிகளைச் செய்வதற்காக திருத்தொண்டர்கள் தெரிவு செய்யப்படுகின்றனர். இத்திருத்தொண்டர்கள் தூய ஆவியின் வல்லமையால் நிறைவு பெற்றனர். ஸ்தேவான் உயிர்த்த கிறிஸ்துவின் காட்சியைக் கண்டார். இயேசு கிறிஸ்துவைக்கண்டு கொண்ட ஸ்தேவான் துணிவுடன் மகிழ்ச்சியோடு மரணத்தையும் ஏற்றுக் கொண்டார்.

- நாங்களும் முதிர்ச்சியடைந்த கிறிஸ்தவர்களாக வாழும் போது. இறைமாட்சிமையைக் காண முடியும்.
- இறைமகிமையைக் கண்டடைந்த நாம், தூய வாழ்வில் ஏற்படும் சவால்களை வெற்றியுடன் எதிர் கொள்ள முடியும்.
- அன்றாடக் கடமைகளை ஆரம்பிக்கும் முன் தூய ஆவியின் வல்லமையை நாம் நாட வேண்டும்.

நான் துணிந்து செயற்பட்டு
கடவுளின் விருப்பத்தை நிறைவேற்றுவேன்

## செயற்பாடு

1. நீர் முதிர்ச்சியுள்ள கத்தோலிக்கனாக பணிபுரிய முற்பட்ட போது நீர் எதிர் கொண்ட சவால்களையும் அதனை நீர் மேற்கொண்ட முறைகளையும் பட்டியற்படுத்துக.

| இடங்கள் | சவால்கள் | வெற்றி கொண்ட முறைகள் |
|---|---|---|
| வீட்டில் | | |
| பாடசாலையில் | | |
| நண்பர் மத்தியில் | | |
| ஆலயத்தில் | | |

2. கீழே கொடுக்கப்படும் விடயங்களை உள்ளடக்கி சிறு செபப் புத்தகம் ஒன்று தயாரியுங்கள்.
   - i. தூய ஆவி குறிக்கும் புறாவின் படம்
   - ii. தூய ஆவியின் செபம்.
   - iii. தூய ஆவிக்குரிய பாடல்.
   - iv. தூய ஆவியின் ஆலயமாகிய நீர், சமூகத்திற்கு ஆற்றக்கூடிய பணிகளின் பட்டியலை (பாடசாலையில், ஆலயத்தில், விளையாட்டு மைதானத்தில் ..............) தருக.



**வாழ்க்கைக்கு**

பரிசுத்த ஆவியினால் நிறையப் பெற்ற நான் சமூகப் பணிகளுக்காக என்னை அர்ப்பணிப்பேன்.